அறிவித்து போராட்டம் நடத்தும் பொழுது திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலை போதுமானதாக இல்லை. அந்தக் காலகட்டங்களில் அரசுப் பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில், கல்யாண மண்டபங்களில் வைக்கிறார்கள். அதனால் அவர்கள் எந்த நேரத்திலும் தப்பிச் செல்ல வாய்ப்பு உள்ளது. காவல் துறைக்குப் பல சிரமங்கள் ஏற்படுவதால், திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்த முடியவில்லை என்றாலும், சீரமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது எப்பொழுது அமைக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவாக அப்பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 322, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வினா எண் 323, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 324 திரு ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 325, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

325 —

சமூகக் காடுகள் வளர்ப்பு திட்டத்தில் தைலமரங்கள் வளர்த்தல்

*53809—திரு. **சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலங்களில் தைலமரம் வளர்க்கப்படுகின்றது.?

(ஆ) அவை அன்றாட சந்தை விலையில் விற்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 ஏப்ரல் 18]

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் 1993 வரை 465.50 எக்டேர் பரப்பில் தைல மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளது. இது தவிர தமிழ்நாடு வனத் தோட்டக்கழகத்தினால், இம்மாவட்டத்திலே தற்பொழுது 14,700 எக்டேர் பரப்பளவில் தைல மரத் தோட்டங்கள் புதுக்கோட்டை மண்டலத்திலே உள்ளது.

(ஆ) தைல மரங்கள், அரசு ஆணையின்படி நிர்ணயிக்கப்படுகின்ற விலையில், தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திரு சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 4,800 ஏக்கர் சமூக நலத் துறைத் திட்டத்தின் கீழும், 480 ஹெக்டேர் ஆக 5,000-க்கும் மேற்பட்ட தைல மரங்கள் புதுக்கோட்டையில் வளர்க்கப்படுகிறது. அதிலே மாண்புமிகு அமைச்சரவர்கள், ஒதுக்கப்பட்ட சில துறைகளுக்கு அந்த மரங்கள் விற்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எந்தெந்தத் துறைக்கு அரசு ஒதுக்கி இருக்கிறது? அது சந்தை விலையில் — அன்றாட மார்க்கெட் நிலவரத்திற்கு விற்கிறார்களா அல்லது ஒரு குறிப்பிட்ட விலைக்கு நிரந்தரமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் நிறுவனங்கள் என்பது பெரிய ஃபேக்டரீஸ் — இப்போது சேஷசாயி, விஸ்கோஸ் இதுபோன்ற பல்வேறு நிறுவனங்களுக்கு நாம் தந்து கொண்டிருக்கிறோம். அரசு நிர்ணயிக்கின்ற விலையில், நீங்கள் சொல்வதைப்போல அதற்கு ஆண்டுதோறும் 10 சதவீதம் கூடுதலாக விலை உயர்த்தி அவர்களுக்கே வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு.சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது அவர்கள் என்ன விலைக்கு இன்றைக்கு நிர்ணயம் செய்து சேஷசாயி பேப்பர் மில்லாக இருந்தாலும், விஸ்கோஸ் மில்லாக இருந்தாலும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இன்றைய மார்க்கெட் நிலவரம் டன் ஒன்று ஸ்பாட் ரேட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு 800 ரூபாய், 900 ரூபாய் விற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விலையை அனுசரித்து அவர்கள் விற்றுக் கொண்டிருக்கிறார்களா அல்லது குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது 800 ரூபாய் என்று சொன்னார்கள். அதற்குமேலே நாங்கள் விலையை நிர்ணயித்து இருக்கிறோம். 1,425 ரூபாய் ஒரு வகை -- அதிலே 4 வகைகளாக நாங்கள் பிரித்துத் தந்திருக்கிறோம். 1,235, 1,020 போன்ற விலையிலே நாங்கள் விற்றுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு துணைக் கேள்விகள்தான். நீங்கள் முதலிலே கேட்கும்போதே இந்தக் கேள்விகளையெல்லாம் சேர்த்திருக்க வேண்டும்.

வினா எண் 326, திரு த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

326—

திருவெறும்பூருக்குப் பேருந்து இயக்குதல்

*36004—**திரு. த. ரத்தினவேல்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி சந்திப்பிலிருந்து பொன்மலை ஆர்மரிகேட் ஆயில்மில் வழியாக திருவெறும்பூருக்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை வழித்தடப்பகுதி முழுமையும் பேருந்து வசதி பெற்ற பகுதியாகையால் தற்போது புதியதாக நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.